173 BNSS

**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(குற்ற.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069008

Deputy Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram.

[illegible signature] 28/1/25

1. District மாவட்டம் : Kanchipuram   PS காவல்நிலையம் : Kanchipuram VIAC   Year ஆண்டு : 2025   FIR No. மு.த.அ. எண் : 1/AC/2025/KM   Date நாள் : 28.01.2025 at 10.00hrs.

2. (i) Act சட்டம் : The prevention of corruption   Sections பிரிவுகள் :

(ii) Act சட்டம் : ACT 1988 (as amended in 2018)   Sections பிரிவுகள் : U/s. 7(a)

(iii) Act சட்டம் :   Sections பிரிவுகள் :

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : 27.01.2025   Date to நாள் வரை : @ 17.15 hrs.

Time Period நேர அளவு :   Time from நேரம் முதல் :   Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.01.2025   Time நேரம் : 08.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.01.2025   Time நேரம் : 08.30hrs to 10.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   Statement of complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   East - About 16 kms.

Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி   O/o. the Assistant Engineer, TNEB, Walajabad, Kanchipuram District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

Seen [illegible] 28.1.25

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Manikandan @ Karthi   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Nagaraj

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-29   (d) Nationality : நாட்டினம் Indian   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Seen [illegible] 28/1/25

Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் : Proprietor   (g) Address : முகவரி No. 10/681, Poolambara, Walayar, Pudussery East, Palakkadu District, Kerala State.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Jayaravikumar, Commercial Inspector, O/o. the Assistant Engineer, TNEB, Walajabad, Kanchipuram District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—



[PTO]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demand of Rs 5,000/- as bribe.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — NIL —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — NIL —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது! இன்று 28.01.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலர் ஆக இருந்தபோது, திரு.N.மணிகண்டன் @ கார்த்தி, வயது-29, த/பெ.நாகராஜ், எண்.10/681, பூலம்பாறா, வாளையார், புதுச்சேரி கிழக்கு, பாலக்காடு மாவட்டம், கேரளா மாநிலம் என்பவர் நிலையம் ஆஜராகி மனு கொடுத்து, பின்பு அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை காலை 08.30 மணி முதல் 09.00 மணி வரை என்னால் பதிவு செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு,

(FIR contents attached in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. Geetha Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 28-1-2025 | (signature) 28/01/2025
14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.01.2025 at 12.25 hrs.

Name: பெயர் R. Geetha
Rank: நிலை Inspector of Police, No. எண்
Vigilance and Anticorruption,
Kanchipuram.
28.01.2025

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2025/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

நான் கேரளாவில் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள பூலம்பாறையில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு பூர்விகம் கேரளா தான். ஆனால் எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் தமிழ் தெரியும். தமிழில் தான் பேசுவோம். நான் ITI Elctirician Royal ITI, கோயம்புத்தூரில் முடித்தேன். நான் தற்போது சொந்தமாக Rainbow Agency என்ற பெயரில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரும் பணியை செய்து வருகிறேன். நான் எனக்கு தெரிந்த நண்பர் மூலமாக. கடந்த 2022-ல் காஞ்சிபுரம் மாவட்டம். வாலாஜாபாத் தாலுக்காவிற்குட்பட்ட ஊத்துக்காடு கிராமத்தில் உள்ள ஸ்ரீ லட்சுமி நகர் என்ற மனைப்பிரிவு மனை எண்.41 மனையை எனது பெயரில் வாங்கி பதிவு செய்தேன். பின்பு அந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக தற்காலிக மின்இணைப்பு பெற வேண்டி. கடந்த 22.01.2025-ந் தேதி வாலாஜாபாத்தில் உள்ள இ-சேவை மையத்தில் ஆன்லைனில் மனு செய்துவிட்டு. உதவி பொறியாளர் வாலாஜாபாத் அலுவலகத்திற்கு சென்று விசாரித்தபோது அங்கிருந்த ஒருவர். CA பாபு என்பவரின் செல்போன் எண் கொடுத்து அவரை தொடர்பு கொண்டு பேசுமாறு தெரிவித்தார். நானும் சிறிதுநேரம் அலுவலகத்தில் காத்திருந்துவிட்டு. அவரிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசினேன். அதற்கு CA பாபு உங்க இடமான ஊத்துக்காட்டிற்கு செல்லுங்கள். நான் வருகிறேன் என்று தெரிவித்தார். அதன்பின்பு நான் எனது இடத்திற்கு சென்றுவிட்டு அவரை தொடர்பு கொண்டு பேசினேன். பின்பு அன்றே மாலை சுமார் 5 மணிக்கு எனது இடத்தை பார்வையிட CA பாபு மற்றும் அவருடன் ஒருவரும் வந்தார்கள். அவர்கள் இடத்தை பார்வையிட்டுவிட்டு. எனது மனுவையும் ஆவணத்தையும் CA பாபு பெற்றுக்கொண்டு. தகவல் சொல்வதாக கூறிவிட்டுச் சென்றார். பின்பு எந்த தகவலும் எனக்கு வராததால். நான் நேற்று (27.01.2025) காலை சுமார் 12 மணிக்கு வாலாஜாபாத் உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று CA பாபுவை பற்றி கேட்டதற்கு. அவர் அலுவலகம் வரவில்லை என்று தெரிவித்தார்கள். பின்பு நான் வந்துவிட்டேன். அதன்பிறகு எனது இடத்திற்கு சென்றுவிட்டு. மதியம் சுமார் 12.45 மணிக்கு வாலாஜாபாத். உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று எனது மனு சம்மந்தமாக விசாரித்தபோது. அங்கிருந்த Commercial Inspector ஜெயரவிக்குமார் அவர்கள் உங்கள் மனு என்னிடம் தான் உள்ளது என்று என்னிடம் காட்டி. நீங்கள் RCCB கச்சி போட்டுவிட்டு. போட்டோ எடுத்து எனக்கு வாட்ஸ்அப்பில் அனுப்புங்கள். நான் சொல்கிறேன் என்று கூறி. அவரது செல்போன் நம்பரை தந்தார். பின்பு நான் வாலாஜாபாத்திற்கு வந்து மின் இணைப்பிற்கான பொருட்கள் வாங்கிவிட்டு. RCCB யை மட்டும் போட்டோ எடுத்து Commercial Inspector அவர்களுக்கு வாட்ஸ்அப்பில் அனுப்பினேன். அவர்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2025/KM, U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

அதை பார்க்காததால் எனது செல்போனில் இருந்து (9567891215) அவரது செல்போனுக்கு (8883990007) தொடர்புகொண்டு பேசினேன். அதற்கு அவர் அலுவலகத்திற்கு என்னை நேரில் வந்து சந்திக்குமாறு தெரிவித்தார். பின்னர் நான் மீண்டும் மாலை சுமார் 5.15 மணிக்கு வாலாஜாபாத் உதவி பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, Commercial Inspector ஜெயரவிக்குமார் அவர்களை சந்தித்து, நீங்கள் சொன்னதுபோல் போர்டு, பொருள் மற்றும் ஒயர் எல்லாம் போட்டுவிட்டேன். நான் ஊருக்கு செல்லவேண்டும் எனக்கு விரைவில் தற்காலிக மின்இணைப்பு வழங்குங்கள் எனச் சொன்னேன். அதற்கு அவர் பணம் செலவாகும், உதவி பொறியாளருக்கு பணம் தரவேண்டும். நாளை காலை பணம் ரூ.5,000/-ம் எடுத்துக்கொண்டு அலுவலகம் வந்து தன்னை சந்திக்குமாறும், அப்போதுதான் உங்களது மனுவை பரிந்துரை செய்து, உதவி பொறியாளருக்கு அனுப்பி நடவடிக்கை எடுப்பேன் என்றும், உங்களுக்கு இரண்டு நாட்களில் மீட்டரை பொருத்திவிடுவதாகவும் தெரிவித்தார். எனக்கு Commercial Inspector ஜெயரவிக்குமார் கேட்ட லஞ்சப்பணம் ரூ.5,000/-ஐ கொடுக்க விருப்பம் இல்லாததால், நான் காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து, எனது இடத்திற்கு தற்காலிக மின்இணைப்பு வழங்க எனது மனுவினை உதவி பொறியாளருக்கு பரிந்துரை செய்ய லஞ்சப் பணம் ரூ.5,000/- கேட்ட Commercial Inspector ஜெயரவிக்குமார் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். அவர் மீது தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதை தங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது பெயரினை (மணிகண்டன்) என்பதை கேரளா அரசிதழில் கார்த்தி என்று பெயர் மாற்றம் செய்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும், ஆனால் தமிழ் சரிவர எழுத தெரியாத காரணத்தால், நான் சொல்ல சொல்ல தாங்கள் அலுவலக கணினியில் டைப் செய்தீர்கள். நான் படித்துப் பார்த்தேன், சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு, (Sd/-. xxxx Manikandan. 28.01.2025.)

**Honoured Sir,**

The above statement of complaint was recorded by me on 28.01.2025 between 08.30 hrs and 09.00 hrs, after verifying the antecendents of the accused and credibility of the complainant. After obtaining permission from the DVAC, Chennai, I have registered a case in Kanchipuram V&AC, Cr.No.1/AC/2025/KM, u/s. 7 (a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 28.01.2025 at 10.00 hrs. The original FIR along with statement of complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Kanchipuram. Copies send to the Officers concerned and took-up the investigation.

R. [signature] 28/01/2025
Inspector/V&AC
Kanchipuram.